சுபக்ருத் ஸ்ரீ கார்த்திகை மீ
நவம்பர் - டிஸம்பர் 2022

மலர்: 5
இதழ்: 8

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747

Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





ஸ்ரீ பேயாழ்வார்

ஸ்ரீ:

சுபக்ருத் ஸூ கார்த்திகை மீ
நவம்பர் - டிஸம்பர் 2022

மலர்: 5
இதழ்: 8

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**

ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஶ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

ஆசார்ய வள்ளலான நம் தூப்புல் தேசிகனின் வார்ஷிகோத்ஸவத்தைத் தொடர்ந்து, ஸேனைநாதன் மற்றும் முதலாழ்வர்களின் – அதிலும் க்ஷேத்ராசார்யரும் தமிழ்த் தலைவனுமான ஸ்ரீ பேயாழ்வாரின் – வார்ஷிகோத்ஸவ / திருநக்ஷத்ர வைபவங்களை அநுபவிக்கும் பாக்யத்தைப் பெற்றோம். இந்த கார்த்திகை ஸஞ்சிகையில் மேற்படி உத்ஸவங்களின் விசேஷ வண்ணப் படங்களைக் கண்டு களிக்கலாம்.

முதலிருவர் ஏற்றிய விளக்கொளியில் திருவுடன் சேர்ந்த ஆழிவண்ணனைப் பேயர், தாமும் கண்டு, நமக்கும் 'அவனே சார்வு' எனத் தீஞ்சுவை இயற்பாக்களால் காட்டினார். அதை நாம் ஓர்ந்து, அநுஷ்டிக்கும் மாதமாக அமைகிறது கார்த்திகைத் திங்கள். இந்த அநுஷ்டானத்துக்கு முன்னோடிகள் நித்யஸூரிகளே. இதை வேதம் 'யக்ஞேந யக்ஞம் அயஜந்த தேவா:' (இவ்வேள்வியின் மூலமாக எம்பெருமானை நித்யஸூரிகள் வழிபடுகின்றனர்) என்கிறது. அவ்வேள்விதான், சரத்பூர்ணிமை அன்று, தீபத்தில் எம்பெருமானை ஆவாஹநம் செய்து, அதனைக் கொண்டு எம்பெருமானை அர்ச்சிப்பது என்பதான க்ருத்திகாதீபஆராதநம். இது நித்யமாக ஆஹ்நிகங்களிலும், உத்ஸவமாக ஆகமங்களிலும் விதிக்கப்பட்டிருக்கிறது. இதை சிறாரும் பெண்டிரும் தாந்த்ரிகமாக ஆநுஷ்டிப்பது, ஸ்ரீபாஷ்யகாரர் இட்ட கட்டளைகளில் ஒன்றான 'உகந்து அருளின திவ்யதேசங்களுக்கு திருவிளக்கு உண்டாக்குதல்' என்பதாக அமையும்.

வரும் மாதத்தில் ஒரு விசேஷம். கார்த்திகைத் திங்களும்தாரையும் சேர்ந்த நன்னாளே, 'ஸர்வேச்வரன் பக்கலிலே ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணிய' கலியன் அவதரித்த திருநாளாகும். ஆனால் இவ்வருடம் ஆலிநாடன் சாற்றுமுறையானது, பாஞ்சராத்ர பரணிதீபத்தன்று ஸம்பவிக்கிறது. இதனை கலியன் அருளிச்செய்த, வேதங்களின் ஆறு அங்கங்களுக்கு நிகரான ப்ரபந்தங்களான பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் இவற்றின் அருளிச்செயல் கோஷ்டியுடன் கர்ப்போத்ஸவமாக பத்து தினங்கள் அநுபவிக்கக் காத்திருக்கிறோம். மறுநாள் திருக்கார்த்திகையன்று, தூப்புல் மாபுருடனால் 'நம் பாணநாதன்' என்று கொண்டாடப்படும் திருப்பாணாழ்வாரின் திரு அவதார உத்ஸவத்தைக் கண்டுகளிக்க இருக்கிறோம்.

இதனைத் தொடர்ந்து, தைலக்காப்பு / எம்பெருமான் பட்டோலை ப்ரஸாதித்து நம்மாழ்வாரை அழைத்து வர நியமிப்பது, முதலான வைபவங்கள் அத்யயந உத்ஸவத்துக்கு பூர்வாங்கமாக அமைவதை வரும் மாதங்களில் அநுபவிப்போம். ✻

ஸ்ரீ:

# Dispelling The Darkness Of Ignorance

FROM THE DESK OF TRUSTEES

After Deepavali – a festival of lights, joy and hope – in Aippasi, it's time for a similar one this month. Thiru-Karthikai at our homes or Thiru-Karthikai Deepotsavam at temples, celebrated on the Pournami day, has much traditional value attached to it.

In fact, throughout the month of Karthikai, lamps are lit in front of our houses in the evening and customary prayers are offered. On the Thiru-Karthikai Deepam day, the whole house is decorated with silver, brass and earthen lamps and lit beautifully. So too are temples. In further celebration of the festival of lights, crackers are burst enthusiastically, just like Deepavali.

Much more than just decorating and illuminating the place, the celebration carries a profound life truth. Light dispels darkness and when the darkness of ignorance within us is replaced by the light of wisdom, it signifies the triumph of good over evil.

As for temples, a specially lit Deepam with devotional fervour is used to ignite 'Sokkappanai'. Kaliyan Thirunakshatram usually falls on the day of the Thiru-Karthikai Deepotsavam, and sometimes it is Thirup-paan Azhwar Thirunakshatram. This year, it happens to be the latter. Either way, the Deepotsavam celebrated with an Azhwar Satrumurai is a given.

After the Thiru-Karthikai Deepotsavam, 'Thaila-kaappu' will be applied on all the deities in our temple and, as a norm, there will be no Thirumanjanam performed or procession carried out until the completion of Adhyayana Utsavam.

Another highlight of the month is the nine-day Panchami Theertham Utsavam to Goddess Sri Alarmelmanga. On each day, Thayar will be richly decorated with ornaments and taken in processions on different Vahanams in the evening. On the last day, Theerthavaari Utsavam will be performed in the morning.



ஸ்ரீ:

# சுபக்ருத் வருட - கார்த்திகை மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| நவம்பர் / டிஸம்பர் | கார்த்திகை | | | | | |
| 17/11/2022 | 1 | நவமி | வியாழன் | மகம் | மாத பிறப்பு. காலை பெருமாள் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு | மாதப்பிறப்பு: ஸ்ரீமதி ஹரிணி சிந்தாமணி |
| 18/11/2022 | 2 | நவமி / தசமி | வெள்ளி | பூரம் | காலை பெருமாள் தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் கருட வாஹனம், உள் புறப்பாடு, ஆஸ்தானம் | தாயார் உத்ஸவம்: ஸ்ரீ N. வராஹன் |
| 19/11/2022 | 3 | தசமி / ஏகாதசி | சனி | உத்தரம் | காலை தாயார் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை உள்புறப்பாடு | ஸ்ரீ S.V.S. ராகவன் |
| 20/11/2022 | 4 | ஏகாதசி / த்வாதசி | ஞாயிறு | ஹஸ்தம் | தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 1ம் நாள். காலை தாயார் திருமஞ்ஜனம், மாலை பத்ம வாஹனம் உள்புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ D.S. ராஜகோபாலன் |
| 21/11/2022 | 5 | த்வாதசி / த்ரயோதசி | திங்கள் | சித்திரை | தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 2ம் நாள். காலை - தாயார் திருமஞ்ஜனம், மாலை - ஸூர்யப்ரபை உள்புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N.S. வரதாச்சாரி குடும்பத்தினர் |
| 22/11/2022 | 6 | த்ரயோதசி / சதுர்தசி | செவ்வாய் | ஸ்வாதி | தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 3ம் நாள். காலை - தாயார் திருமஞ் ஜனம், மாலை - கருடவாஹனம் உள்புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீமதி பங்கஜம் ரங்கராகவன் |
| 23/11/2022 | 7 | சதுர்தசி / அமாவாசை | புதன் | விசாகம் | தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 4ம் நாள். காலை - தாயார் திருமஞ்ஜனம், மாலை - சந்திரப்ரபை உள்புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ V.C. ஸ்ரீபதி |
| 24/11/2022 | 8 | ப்ரதமை | வியாழன் | அனுஷம் | தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 5ம் நாள். காலை - தாயார் திருமஞ்ஜனம், மாலை - கிளி வாஹனம் உள்புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் |
| 25/11/2022 | 9 | த்விதீயை | வெள்ளி | கேட்டை | தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 6ம் நாள். காலை - தாயார் திருமஞ்ஜனம், மாலை - யானை வாஹனம் உள் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ A.V. ஸ்ரீநிவாஸன் |
| 26/11/2022 | 10 | த்ருதீயை | சனி | மூலம் | தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 7ம் நாள். காலை - தாயார் திருமஞ் ஜனம், மாலை - கஜலக்ஷ்மி வாஹனம் உள்புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ L.V. நரசிம்மன் குடும்பத்தினர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27/11/2022 | 11 | சதுர்த்தி | ஞாயிறு | பூராடம் | தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 8ம் நாள். காலை – தாயார் திருமஞ்ஜனம், மாலை – குதிரை வாஹனம் உள் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம்: ஸ்ரீமதி கமலா – சுமைதாங்கி கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர். திருமஞ்ஜனம் மட்டும்: ஸ்ரீமதி வஸந்தா வாஸுதேவன் |
| 28/11/2022 | 12 | பஞ்சமி | திங்கள் | உத்தராடம் | பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 9ம் நாள். தீர்த்தவாரி. மாலை தங்கடேயம் உள் புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. கலியன் உத்ஸவம் 1ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை | பஞ்சமி தீர்த்தம்: ஸ்ரீ R. ராஜகோபாலன். 28.11.2022 முதல் 07.12.2022 வரை கலியன் உத்ஸவம் 10 நாட்களும் செட்டிபுண்யம் C.S. பார்த்தஸாரதி |
| 29/11/2022 | 13 | ஷஷ்டி | செவ்வாய் | ச்ரவணம் | காலை பெருமாள், ஸ்வாமி தேசிகன் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு, ஸேவாகாலம், சாற்றுமுறை. கலியன் உத்ஸவம் 2ம் நாள் மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ச்ரவணம்: ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன் குடும்பத்தார் |
| 30/11/2022 | 14 | ஸப்தமி | புதன் | அவிட்டம் | கலியன் உத்ஸவம் 3ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 01/12/2022 | 15 | அஷ்டமி | வியாழன் | சதயம் | கலியன் உத்ஸவம் 4ம் நாள் மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 02/12/2022 | 16 | நவமி | வெள்ளி | பூரட்டாதி | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு. கலியன் உத்ஸவம் 5ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | வெள்ளிக்கிழமை: TVS மோட்டார் கம்பெனி லிமிடெட் |
| 03/12/2022 | 17 | தசமி | சனி | உத்தரட்டாதி | கலியன் உத்ஸவம் 6ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 04/12/2022 | 18 | ஏகாதசி | ஞாயிறு | ரேவதி | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு. கலியன் உத்ஸவம் 7ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | கைசிக ஏகாதசி: ஸ்ரீ M.V. ஸந்தானம் |
| 05/12/2022 | 19 | த்வாதசி | திங்கள் | அச்வினி | கைசிக த்வாதசி. காலை புராண படனம். கலியன் உத்ஸவம் 8ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | கைசிக த்வாதசி – புராணபடனம்: ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்ரன் குடும்பத்தினர் |
| 06/12/2022 | 20 | த்ரயோதசி | செவ்வாய் | பரணி | கலியன் உத்ஸவம் 9ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 07/12/2022 | 21 | சதுர்தசி | புதன் | க்ருத்திகை | ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள் கலியன் திருமஞ்ஜனம். மாலை வீதி புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 08/12/2022 | 22 | பௌர்ணமி | வியாழன் | ரோஹிணி | ஸ்ரீ திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம். பாஞ்சராத்ர தீபம். காலை பெருமாள், தேசிகன், ஆழ்வார் திருமஞ்ஜனம். மாலை பொழுதுடன் திருஆராதனம். தீபாராதனம். பெருமாள், ஆழ்வார், தேசிகன் வீதி புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. இரவு தைலக்காப்பு | ஸ்ரீ திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்: ஸ்ரீமதி சாந்தா சடகோபன். திருக்கார்த்திகை திருமஞ்ஜனம்: ஸ்ரீமதி வத்ஸலா. திருக்கார்த்திகை வீதி புறப்பாடு: வரதாச்சாரி குடும்பத்தினர் |
| 09/12/2022 | 23 | ப்ரதமை | வெள்ளி | ம்ருகசீர்ஷம் | ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள் | |
| 10/12/2022 | 24 | த்விதீயை | சனி | திருவாதிரை | ஸ்ரீ பாஷ்யகாரர் | |
| 11/12/2022 | 25 | த்ருதீயை | ஞாயிறு | புனர்வஸு | ஸ்ரீ குலசேகராழ்வார் | |
| 12/12/2022 | 26 | சதுர்த்தி | திங்கள் | புஷ்யம் | திருமால்வடை | |
| 13/12/2022 | 27 | பஞ்சமி | செவ்வாய் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 14/12/2022 | 28 | ஷஷ்டி | புதன் | மகம் | ஸ்ரீ திருமழிசை ஆழ்வார் | |
| 15/12/2022 | 29 | ஸப்தமி | வியாழன் | பூரம் | ஸ்ரீ ஆண்டாள் | |

## கார்த்திகையில் முக்கிய உத்ஸவங்கள்

**தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம்**
(9 நாட்கள்)
நவம்பர் 20 (ஞாயிறு) முதல் 28 (செவ்வாய்) வரை
**தீர்த்தவாரி**
நவம்பர் 28 (செவ்வாய்)

**ச்ரவணம்**
நவம்பர் 21 (புதன்)

**கைசிக ஏகாதசி**
டிஸம்பர் 4 (ஞாயிறு)

**கைசிக த்வாதசி**
டிஸம்பர் 5 (திங்கள்)

**கலியன் சாற்றுமுறை**
டிஸம்பர் 7 (புதன்)

**திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்**
**திருக்கார்த்திகை தீப உத்ஸவம்**
டிஸம்பர் 8 (வியாழன்)

## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் **'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'** இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.

# பாதுகையின் பெருமை

ஸ்ரீ உ.வே. திருவயிந்தை திருவாழி க்ருஷ்ணதேசிகாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

நாம் சற்று ஸ்வாமி தேசிகனின் பாதுகா ஸஹஸ்ர க்ரந்த அத்புதங்களைப் பார்ப்போம். பாதுகை நம்மாழ்வாரே தான் என்பது பெரியோர்களின் திருவுள்ளம். ஸ்வாமி தேசிகன் ஸகல சாஸ்த்ர விஷயங்களை இந்த க்ரந்தத்தில் காட்டியுள்ளார். கீழ்கண்ட அபிஷேக பத்ததி – 182ம் ச்லோகத்தின் வ்யாக்யானம் அத்புதமானது.

*ராகவஸ்ய சரணௌ பதாவநி ப்ரேக்ஷிதும் த்வதபிஷேகம் ஈக்ஷது:|*
*ஆபிஷேசநிகபாண்ட ஸந்நிதௌ யத் ப்ரதக்ஷிணகதி: சனைர்யயௌ ||*


ராமனுக்கு பட்டாபிஷேகம் நிச்சயிக்கப்பட்டது. பின்பு இல்லை என்று தீர்மானித்த சிற்றன்னையின் சொல் கொண்ட ஸ்ரீராமனுக்கு பதினான்கு ஆண்டுகள் வனவாசம் என்றாகியது. வாழ்வில் ஒருவனுக்கு ஒரு வஸ்துவின் மேல் ஆசை இருக்கும். அது கிடைக்காவிட்டால் அதையே மெல்ல பார்த்துக்கொண்டே செல்வது வழக்கம். அதைப்போல் ராமன் தான் கானகத்திற்கு பாதுகைகளை சாற்றிக் கொண்டு கிளம்பும் ஸமயத்தில், தன் ராஜ்யாபிஷேகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வஸ்துக்களை அருகில் சென்று பார்த்து அவற்றை ப்ரதக்ஷணமாக செல்கிறார்.

உலகத்தில் இயற்கையில் மனிதன் தனக்குக் கிடைக்க வேண்டிய அற்புதமான திருக்கண்ணமது கிடைக்கவில்லையாயின், அதை தன்னைத் தவிர யாரும் அனுபவிக்கக்கூடாது என்ற எண்ணம் உள்ளவன். ஆனால் காரேய் கருணை இராமன் என்ன திருவுள்ளம் கொண்டார் தெரியுமா, இப்பேர்ப்பட்ட வஸ்துக்கள் தனக்கு கிடைக்கவில்லையாயினும் பரவாயில்லை, இவை வீணாகாமல் யாருக்கவது கிடைக்க வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார். இப்படியான திருவுள்ளம் பெருமாளைத் தவிர யாருத்தான் இருக்கும். பெருமாள் தன்னுடைய ஒவ்வொரு அவதாரத்திலும் தன் கருணையின் மூலம் தன்னை ஆச்ரயித்தவர்களை எப்பொழுதும் மகிழ்விப்பதையே நோக்காக உடையவர் என்பது கருத்து.

*ப்ராதுர்நியோகே அப்யநிவர்த்தமாநம் ராஜ்யாபிஷேகம் ச பரித்யஜந்தம்|*
*ராமாநுஜௌ தௌ நநு பாரதந்த்ர்யாத் உபாவுபாப்யாம் பவதீ ஜிகாய ||*

(அபிஷேக பத்ததி – 184)

பெரியவர்களின் சொல்லை இளையவர்கள் கேட்பது தான் வழக்கம். ராமன் தன் தம்பிகளான பரதனையும், சத்ருக்னனையும் பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டு அயோத்தியில் இருங்கள் என்றார். அயோத்திக்கு வனவாசம் முடிந்து தான் வருவேன் என்று கூறிய ராமன் சொன்னதை அவர்கள், ராமனில் மேல் இருந்த பாசத் தால் ஏற்கவில்லை. அவர்கள் பிடிவாதமாக நந்திக்ராமத்தில் தங்கி விட்டார்கள். ஆனால் பாதுகாதேவி பெருமாள் சொன்னதை ஏற்று, கானகத்தில் இருந்து திரும்பி வந்து, பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டு ராஜ்ய பரிபாலனம் செய்தாள். எனவே பாதுகை பரத சத்ருக்னர்களைக் காட்டிலும் மேம்பட்டவள் என்பது பெரியோர் திருவுள்ளம். நித்யஸூரியான பாதுகாதேவி பெருமாள் சொன்னதை கேட்டு அவர் திருவுள்ளப்படி இசைந்து நடந்தாள் என்பது பாதுகையின் ஏற்றம் தானே!



*ஸூர்யாத்மஜா ஹரி சிலாமணி பங்க்தி லக்ஷயாத்*
*த்வாம் நித்யம் ஆச்ரிதவதீ மணிபாதரக்ஷே |*
*ஆதௌ ஜநார்தநபதே க்ஷணமாத்ர லக்நாம்*
*ஆஸந்த மௌக்திகருசா ஹஸதீவ கங்காம் ||*

(பஹுரத்ந பத்ததி - 564)

ஸ்வாமி தேசிகனின் அற்புதமான இந்த ச்லோகத்தில், இரண்டு நதிகளுக்குள் யார் பெருமாள் திருவடிகளில் அதிக நேரம் இருந்தார்கள் என்று போட்டி. பாதுகையின் திருமேனியில் இந்த்ரநீலக் கற்கள் ஒளிவீசுகிறன. அந்த காந்தி ஸூர்யனின் புதல்வியான யமுனா நதியைப் போல் இருக்கிறது. அந்தக் கதிர்கள் ஒளிவீசி ச் சிரிப்பது போல உள்ளது. யமுனா நதி, கங்கா நதியைப் பார்த்துச் சிரிப்பதாக இங்கு காட்டப்படுகிறது.

‘கங்கா நதியே! நீ பெருமாள் த்ரிவிக்ரமாவதாரம் பண்ணிய போது சற்று நேரம் தான் அவர் திருவடிகளில் சதுப்புயன் தாளில் என்றபடி இருந்தாய். ஆனால் (யமுனையாகிய) நானோ, எப்போதும் நித்யவாஸம் செய்கிறேன்’ என்று சொல்லிச் சிரிப்பது போலே ஸ்வாமி தேசிகன் அழகாக ஸாதித்துள்ளார்.

பெருமாளுக்கு அனேக பக்தர்கள் இருந்தாலும், நம்மாழ்வாரைப் போலே அவனே தாரகமாய் க்ஷண காலமும் பெருமாளை விட்டுப் பிரியாதவர்கள் இந்த உலகில் இல்லை என்பது இங்கு தாத்பர்யார்த்தம். ✲



*With Pranams:*

## V.A. Raghu & Family

225/28, Prithvi Avenue 2nd Street,
Prakrithi Apartments,
Abhiramapuram. Chennai - 600 018.

**SVDD thanks Sri V.A. Raghu & Family**
for sponsoring this month's issue of Desika Sandesam

ஸ்ரீ:

கண்ணுக்கினியன





தீபாவளி உத்ஸவம்













தீபாவளி உத்ஸவம்






ஸேனைநாதன் திருநக்ஷத்ரம்





ஸ்ரீ:





பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்




பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்

ஸ்ரீ:

கண்ணுக்கினியன





**பேயாழ்வார் உத்ஸவம்**









ஸ்ரீ:










## பேயாழ்வார் திருநக்ஷத்ரம்







பேயாழ்வார் திருநக்ஷத்ரம்




கண்ணுக்கினியன

ஸ்ரீ:



பேயாழ்வார் திருநக்ஷத்ரம்



அன்னகூட உத்ஸவம்

ஸ்ரீ:

# பிள்ளைத்தமிழுக்கு வித்திட்ட பெரியாழ்வார் - 4

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

சென்ற இதழில் செங்கீரைப் பருவத்தால் பெரியாழ்வார் எம்பெருமானை அனுபவித்தமையைப் பார்த்தோம். அவர் கண்ணனுக்குப் பாடிய பிள்ளைத்தமிழின் அடுத்த பருவமான சப்பாணிப்பருவத்தை அடுத்ததாகக் காண்போம்.1

**5. சப்பாணிப் பருவம்**


சப்பாணிப்பருவம் குழந்தையின் ஒன்பதாம் திங்களில் நிகழ்வதாகும். ஒன்பதாவது மாதத்தில் குழந்தை உட்காரத் தொடங்கிய பிறகு மகிழ்ச்சியால் கை கொட்டுதல், கையாட்டுதல் போன்ற விளையாட்டுகள் அதனிடம் இயல்பாகத் தோன்றும். பெற்றோரும் மற்றோரும் கைதட்டிக் காட்டி குழந்தையை அழைப்பதோடு குழந்தையையும் கையைத் தட்ட வேண்டுவர். குழந்தை அதற்கேற்ப 'சப்' என்ற ஒலி உண்டாகும் படி 'பாணி'யைக் (கையினைக்) கொட்டி முழக்கும். இதுவே சப்பாணிப் பருவம் ஆகும்.

குழந்தை நிமிர்ந்து அமர்ந்திருக்கும் அமைப்பை 'சப்பாணி' என்று கூறும் வழக்கம் உண்டு. அதனால் இப்பருவம் சப்பாணி என்றும், 'சக + பாணி = சப்பாணி' (ஸஹ = உடன், பாணி = கை) இரண்டு கைகளையும் உடன் சேர்த்துக் கொட்டுதலால் சப்பாணியாயிற்று என்றும், 'ச' என்றால் சேர்த்தல் எனப் பொருள் கொண்டு, கைகளைச் சேர்த்து ஒலி எழுப்புதல் என்றும் பொருள் கொள்வர்.

பெரும்பாலான பாசுரங்களைப் பெரியாழ்வார் தன் நிலையிலிருந்தே கண்ணனை சப்பாணி கொட்டச் சொல்லி அனுபவிக்கிறார்.

முதல் பாசுரத்தில், கண்ணனை, வாமனாவதாரத்தில் மாவலியினிடத்தில் நிலத்தை இரந்த அந்த கைகளால் சப்பாணி கொட்டுவாய் என்று ப்ரார்த்திக்கிறார். எம்பெருமானின் கை வாமனாவ தாரத்தில் குவிந்திருந்ததால் அந்தக் குவிந்த கையினாலேயே தட்டச்சொல்கிறார். சிறு குழந்தைகள் நன்றாக கையை விரித்துக் கொட்டத் தெரியாதிருக்கும் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார். கண்ணனே கருமை! அவன் குந்தலங்களோ அவன்போலவே கருமை. ஆதலால் அந்தக் கறுத்த குழற்கற்றைகளையுடையவனே, சப்பாணி கொட்டுவாய்! என்று பாசுரமிடுகிறார்.

இரண்டாவது பாசுரத்தில், கண்ணனை தன்னுடைய மடியிலிருந்து இறங்கி அவனுடைய தந்தையாரான நந்தகோபருடைய மடிமேல் அமர்ந்து சப்பாணி கொட்டென்கிறார். தன்மடியில் இருப்பது போலவே அங்கிருக்கும் அத்தனை பேரது மடியிலும் காட்சி



கொடுக்கும் மாயன் என்பதால் மாயவனே கொட்டாய் சப்பாணி! என்றார்.

மூன்றாம் பாசுரத்தில், பன்மணி முத்தில் பவளம் பதித்த மணிவண்ணா, உன் தாயின் மடியிலமர்ந்து சப்பாணிகொட்டுவாயாக! என்று கூறி அழகிய மோதிரங்களை அணிந்த அழகிய திருக்கைகள் உடையவனே, சப்பாணி கொட்டாய்! என்று பாசுரமிடுகிறார்.

நான்காம் பாசுரத்தில், நந்தகோபர் கண்ணனெம்பிரான் உறங்குவதற்குச் சயனித்த நேரம் வந்ததாற்போலக் கொண்டு அந்த நந்தகோபர் புகழ் நிலைபெற்று நிற்கக் கண்ணனைச் சப்பாணி கொட்டச்சொல்கிறார். எம்பெருமான் சயனித்திருந்ததைக் கண்டவுடன் அவருக்கு சயனத்திருக்கோலம் நினைவுக்கு வர குடந்தைக் கிடந்தானே, சப்பாணி கொட்டுவாய்! என்று பாசுரமிடுகிறார்.

ஐந்தாம் பாசுரத்தில், சட்டியுள்ள தயிரெல்லாம் உண்டு பானையிலிட்ட வெண்ணையையும் உண்டு களவு மேயும் கன்றுபோன்றவனே, சப்பாணி கொட்டு!

என்று சொல்லி அகண்ட பிரம்மாண்டம் நாபி வழியாக வெளிவரும்படி தயிர்வெண்ணையுண்டவனே என்ற பொருளில் பத்மநாபா, சப்பாணி கொட்டாய்! என்கிறார்.

ஆறாம் பாசுரத்தில், பாண்டவர்களுக்காகப் போரில் தேரூர்ந்து கோலும் கடிவாளமும் ஏந்திய கைகளால் கொட்டாய் சப்பாணி! என்று சொல்லி அதற்குத் தொடர்பாய் தேவகி சிங்கமே சப்பாணி! என்று பாசுரமிடுகிறார்.

ஏழாம் பாசுரத்தில், சமுத்திர ராஜனை வரவழைப் பதற்காக சரந்தொட்ட கைகளாலே சப்பாணி கொட்டு வாய்! என்று சொல்லி அதைச் செய்ய கருவியாய் இருக்கும் சார்ங்கமென்னும் வில்லை நினைந்து அந்த வில்லாளும் கைகளால் கொட்டாய் சப்பாணி! என்று பாசுரமிடுகிறார்.

எட்டாம் பாசுரத்தில், இலங்கை அரக்கர்கள் அழிந்து போகும்படி சரமெடுத்த கைகளால் சப்பாணி கொட்டாய்! என்று இறைஞ்சி அவ்வெல்லா சரங்களின் நுனிகளிலும் திருவாழியானன்றோ நின்று வெற்றியைத் தந்தான் என்று ஆழி நினைவுக்கு வர, நேமியங்கையனே சப்பாணி! என்று பாசுரமிடுகிறார்.

ஒன்பதாவது பாசுரத்தில், நரசிங்கனாய்த் தோன்றி இரணியனின் மார்பை நகங்களால் கிழித்துப் பரிசோதித்த திருக்கைகளால் சப்பாணிகொட்டாய்! என்று சொல்லிப் பூதனையின் முலைப்பால் உண்டவனே சப்பாணி கொட்டு! என்று பாசுரமிடுகிறார்.

பத்தாவது பாசுரத்தில், பாற்கடலை வாசுகியைச் சுற்றிக் கடைந்திட்ட கைகளால் சப்பாணியைக் கொட்டுவாயாக! என்று பாடி முதல் பாசுரம்போல் அவனது நிறத்தைப் பாடி கார்முகில் வண்ணனே சப்பாணி! என்று பாசுரமிட்டு பதினொன்றாம் பாசுரத்தால் இப்பாசுரத்தின் ரஸத்தை அனுபவிக்கும் நம்போல்வருக்கு வினைகள் போய்விடும் என்று பலன் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

**6. வருகைப் பருவம்**

பிள்ளைத்தமிழில் அடுத்த பருவம் வருகைப்பருவம். இந்த பருவத்தை பாவிலக்கணப்படிப் பின்னால் இட்டிருந்தாலும் பெரியாழ்வார் சப்பாணிப் பருவத் திற்குப் பிறகு இடுகிறார். இந்த வருகைப் பருவத்தை இரண்டாகப் பிரித்து அனுபவிக்கிறார். ஒன்று தளர்நடைப் பருவம் அடுத்து சிறிது வேகமாக நடக்கும் பருவம்.

முதன்முதலில் குழந்தை நடக்கும் பொழுது நடை வேகமாக வராது கொஞ்சம் தளர்ந்திருக்கும்; மிருதுவாகவும் இருக்கும். குழந்தை கண்ணனின் கைக்கொட்டலை அனுபவித்தபின் ஆழ்வார் தாய் யசோதையின் பாவனையில் இந்த தளர் நடைப்பருவத்தைப் பாசுரமாக்குகிறார்.

மதம்பெருகும் யானை மெள்ள நடப்பதைப் போன்று கையில் சார்ங்கம் ஏந்தியிருக்கும் கண்ணனானவன் காற்சதங்கைகள் ஒன்றுகூடி சப்திக்க இடையில் மணிகள் பறைகள் போல் ஒலியுண்டாக்க விசாலமான ஒன்றுக்கொன்று சமமாய் உள்ள பாதங்களினால் தள்ளாட்ட நடையிடுவானோ என்று கண்ணன் எவ்வாறு தளர்நடையிடவேண்டும் என்று தாய்பாவத்தில் அனுபவிக்கிறார்.

அடுத்து கண்ணன் என்னும் மணிவண்ணன், வசுதேவனின் குமரன் வாசுதேவன், தள்ளாட்ட நடையிடுகிறான், அப்போது அவனது, சிவந்த பவளம் போன்ற வாயிலே மேடையிட்டாற்போன்ற திருவதரங்களின் மேலே குளிர்ந்தும் வெளுத்துமுள்ள முல்லைப்பற்கள் ஒளிசெய்தனவாம். இது ஒப்பாக ஆழ்வார் அனுபவிப்பது சிவந்த வானத்திலே நாம் மரக்கிளையின் கொம்பு நுனியில் காணும் பாலசந்திரனை. செவ்வானம் செந்துவர்வாய்; மரக்கொம்பு – அதரம்; பாலசந்திரன் – பற்கள். உண்மையில் பாலசந்திரன் கிளையில் படாமல் தான் வானில் விளங்குவான். அதுபோல் இவனது முத்துப்பற்களும் அதரத்தில் படாமலே சிவந்த வாயிலே தோன்றிப் பார்ப்பதற்கு அதரத்தில் இருப்பதுபோல இருக்கும் என்று அனுபவிக்கிறார்.

மூன்றாம் பாசுரத்தில் தளர் நடையிடும் கண்ணனின் திருவாபரணச் சிறப்பினைப் பாடுகிறார். மின்னல் கொடியும், அத்விதீயமாய் வெளுத்திருக்கிற சந்திரமண்டலமும் அதைச்சூழ்ந்த பரிவேட்டமும் போல அரையில் பூண்ட பொற்பின்னலும் அதில் கோக்கப்பட்டு விளங்கி நிற்கும் அரசிலைக் கோவையும், பொன்வண்ணமான சிற்றாடையும் மின்னலாலே விளங்குகின்ற கருத்த மேகம் போன்ற திருக்கழுத்தில் பூண்ட காறை என்னும் ஆபரணத்தோடு தளர்நடையிடுகிறானாம். ஆனால் இவ்வொப்பனைகள் மிகையாம்படி தன் அழகாலே மிக்கு இருக்கின்றானாம். அதனால் அவனை அவ்விதம் ஸேவித்தவர்களின் இந்திரியங்களையெல்லாம் தான் கவருபவனாக இருந்தானாம்.

கண்ணன் தளர்நடை இட்டு வருகிறான். முதலில் அவனை வர்ணிக்கிறார். குழந்தை நீலமேக வண்ணனாக இருக்கிறான். அந்த நீலநிற மேனியில் நீலமார்வு. அதில் மின்னல் மாதிரி மஹாலக்ஷ்மீ இருக்கிறாளாம். அவன் எதன் மேல் நடந்து வருகிறான் என்றால் எதிரிகளின் தலைகளின் மேல் நடந்து வருகிறானாம். அதனால் அது தளர்நடையாயிற்றாம். சர்வஜாக்ரதையாக நடக்கின்றானாம். எதற்காக வருகிறான் என்றால் ஊறிக்கொண்டே இருக்கும் கரும்பஞ்சாறுக்குடம் ஒட்டையடைந்தது

போலிருக்கும் தன் வாயினால் சிரித்துக் கொண்டு தனக்கு முத்தம் கொடுக்க வருகிறான் என்று யசோதை மகிழ்வதாக பாசுரமிடுகிறார்.

அடுத்து, எம்பெருமான் கண்ணன் முன்னடிபார்த்து நடக்கிறான் என்பதைக் காட்டுகிறார். பலராமன் இவனைவிட மூத்தவன். அவன் கொஞ்சம் வேகமாக ஓடுகிறான். அவன் வெண்மையானவன். ஆதலால் அவன் ஓடுவது ஒரு வெள்ளிமலை ஓடுவதை ஒத்திருக்கிறதாம். அவன் பின்னால் தம்பியான இவன் கருநிறத்தவன் தளர்நடை இட்டு நடக்கின்றது ஒரு கருமலை புறப்பட்டு அடியெடுத்து வைப்பது மாதிரியிருக்கிறது என்று மங்களாசாஸனம் செய்கிறார்.

எம்பெருமான் கண்ணன் ஸமுத்ரத்தை ஒத்துக் கருத்தவன்; மன்மதனான ப்ரத்யும்னனுக்குத் தந்தையானவன். அப்படிப்பட்டவன் தளர்நடையிடும் பொழுது அவன் திருப்பாதங்களில் இயற்கையாய்ப் பொருந்தியுள்ள சங்கு சக்கர ரேகைகள் நன்கு தரையில் தெரியும்படி நடந்தானாம். அவன் வடிவழகைக் கண்டபொழுது ஏற்பட்ட இன்பவெள்ளம் அவன் தளர்நடை இட்டபொழுது பெருகியதாம்; சங்கு சக்கரச் சின்னங்கள் படுவதைக் கண்டபொழுது மேலும் மேலும் இன்பவெள்ளம் தொடர்ந்து பெய்தது மாதிரி இருந்தது என்று கொண்டாடிப் பாடுகின்றார்.

எம்பெருமான் அவ்வாறு தளர்நடை இட்டு நடக்கும் பொழுது அவன் வாயிலிருந்து எச்சல் பெருகுகிறது. எம்பெருமானின் திருப்பவளவாய் தாமரையாய்த் தெரிய, அதில் வழியில் எச்சல் அத்தாமரையில் வழியும் தேன் போன்றிருக்கிறது ஆழ்வாருக்கு. இந்தக் குளிர்ந்த வாயமுதின் சிறு துளிகள் முறிந்து முறிந்து விழும்படி, கடுமையான எருதின் கழுத்தில் கட்டப்பட்ட மணியின் ஓசையைப் போல இவன் திருவரையில் கட்டிய மணியானது ஒலியெழுப்ப தன்னுடைய இரண்டு தடத்தாள்களை இட்டு தளர்நடை யிட்டு வருகிறான் என்று பாடுகிறார்.

உலகத்திலுள்ள குழந்தைகளையெல்லாம் சிருஷ்டி செய்யும் வாசுதேவனான இவன் தான் ஒன்றுமறியாது உலகத்திலுள்ள ஒருத்தியால் ஸ்ருஷ்டி செய்த குழந்தையைப் போல, மலைகளின் மேடு பள்ளங்களின் நீர்வீச்சியின் வெள்ளங்கள் பரவிநிற்பதைப் போல சங்குமணி வடங்கள் அவன் திருமேனியில் உயர்ந்தும் தாழ்ந்தும் மறுபடி ஏறியும் இருக்கும்படி நிதம்ப பாகத்தை அசைத்துத் தளர்நடை நடவானோ என்று பாசுரமிடுகிறார்.

இவன் த்ரிவிக்ரமனாக உலகமந்த காலத்தில் வெண்புழுதி இவன் மேல் படிந்ததாம். இப்போது இவன் இளங்கருங்களிறு போல நடந்துவருகின்றான். அவன் உடம்பில் இருக்கும் புழுதி யானையின் மேலிருக்கும் மணல்துகள்களை ஒத்திருக்கிறது. நடக்கும் பொழுது எழும் வியர்வையால் அங்கங்கே மண் கலைந்திருக்கிறது. மண்கலைந்த இடங்களிலெல்லாம் திருமேனியின் காந்தி வெளிச்ச மிடுகிறது. அவனது சிறிய திருப்பாதங்கள் உரிய காலத்தில் மலர்ந்த தாமரையை ஒத்திருக்கிறது. அந்த திருப்பாதங்களை அழுத்தினால் நோகும். அந்த நோவு தெரியாதபடி இருக்க குளிர்ந்த புஷ்பங்கள் நிறைந்த மெத்தையிட்டிருக்கிறாராம். அதில் தளர்நடை இட்டுவர பிரார்த்திக்கிறார்.

செங்கண்மாலான இந்த கேசவ நம்பி, அலையெறியும் கடலினிடத்து ஒளிவீசும் சந்திரனைப் போன்று தன்னுடைய நீர்மை ப்ரகாசிக்கின்ற முகத்தினில் சுட்டியானது திகழ்ந்து விளங்கி இடதும் வலதுமாக அசையும்படி தளர்நடையிடுகின்றான். அப்போது அவனது சிறிய சண்ணத்திலிருந்து நீர் துளியாகச் சொட்டிக்கொண்டே வருகிறது. அப்படிச் சொட்டும் நீர் திருவடியிலிருந்து பெருகிய கங்கையைக் காட்டிலும் குணத்தில் சிறந்து, அத்விதீயமான தீர்த்த பலனைத் தருவது என்கிறார். கங்கையிலாவது நீராடவேண்டும்; இதனைப் பார்ப்பதும் ஸ்பரிசிப்பதுமே போதுமானது என்கிறார்.

தொட்டில் பருவம் தொடங்கி தாங்கள் செய்த தீம்பெல்லாம் முறித்துத் தளர்நடை நடக்கும் பருவம் வந்ததைக் கேட்டு அதுவரையில் கோகுலம் புகாமல் பிழைத்திருக்கும் கம்சன் முதலானோர் இவன் இங்கு வந்து நம்மை அழித்துவிடுவான் என்றஞ்சித் தளர்நடை கொண்டார்கள். தேவகி முதலானோர் கேட்டு மகிழ்ந்தனர்.

எம்பெருமானின் தளர்நடையை இப்படி விரித்து அனுபவித்துக் காட்டியது நம்மனதில் எம்பெருமானின் திருமேனி இந்தத் தளிர்நடையோடு பதிந்து நாம் அவனை அனுபவிக்கவே. ஒரு தளிர்நடையை இவ்வண்ணமாக விரித்துரைக்கலாம் என்று தமிழ் இலக்கியத்திற்கு வித்திட்டவர் பெரியாழ்வார். இவர் இந்த தளர்நடைப் பருவத்தை அனுசந்திப்போர்க்குச் சொல்லும் பலன், **இப்படி மனித பாவனையில் இவன் நடையைச் சொல்லும் இப்பாசுரங்களைக் கற்போர் எம்பெருமானிடம் அசையாத பக்தியைக் கொண்ட பாகவதர்களான மக்களைப் பெற்று மகிழ்வர்** என்பதே.

ஆதலால், பாகவதர்கள் பெருக, பாகவத ஸாரமான பெரியாழ்வார் திருமொழியொன்றே வழி. இந்தத் தளர்நடை அடுத்து கொஞ்சம் வேகமெடுக்கும் நடையாக மாறித் தரும் அனுபவத்தை, இந்த வருகைப் பருவத்தின் இரண்டாம் பாகமாக மாற்றிப் பெரியாழ்வார் இட்டிருப்பதை அடுத்த இதழில் அனுபவிக்கலாம்.

*(தொடரும்...)*

ஸ்ரீ:

# ஆலிநாடனும் ஆரணதேசிகனும்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்



ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் பரமாத்மா. கர்மபத்தர்களான ஆச்ரிதர்கள் ஜீவாத்மாக்கள். ஜீவாத்மா ஸர்வேச்வரனின் புதல்வன் என்கிறது சாஸ்த்ரம். உயர்வற உயர்நலம் உடையவனான எம்பெருமான் ஆச்ரிதர்களுக்கும் தன் திருமார்புறை நங்கைக்கும் இன்பனாய் இருக்கிறான். தெளிவிசும்பாம் ஸ்ரீவைகுந்தத்தே உள்ளவன் நமக்கு இன்பன் என்பதை நம் கர்மாக்கள் உண்டாக்கும் மாயையானது நம்மிடமிருந்து மறைப்பதனால் ஜன்மங்கள் கொண்டு அல்லல்படுகிறோம். ஸ்ரீவைகுண்டமாம் பெருநகரிலே நித்யஸூரிகளுடன் தான் அநுபவிப்பதைப் போன்றே பேரின்பங்களை அநுபவிக்க வேண்டிய ஜீவாத்மாக்கள், அவற்றினை அநுபவிக்க முடியாது, நித்ய கைங்கர்ய ப்ராப்த்தியற்று இருப்பதை எண்ணி க்லேசம் கொள்கிறான் எம்பெருமான். இந்நிலையில், ஜீவாத்மாக்கள் அநுபவிக்கக் கூடிய ஈடுயிணையில்லாத போகத்தினைப் பற்றி அவனுக்கு போதித்து, எம்பெருமான் அவனை ஆட்கொள்ளுமாறு செய்வதற்கென ஜனித்தவர்கள் ஆசார்ய சிரோன்மணிகள்.

ஜீவாத்மாக்கள் மேல் கருணை கொண்டு, அவர்கள் அடைய வேண்டிய புருஷார்த்தங்களை நல்ஞானமாக அவர்களுக்குக் கற்பித்து அவன் ஆத்மா. அவன் கொண்டுள்ள தேகம் அநித்யமானது என்பதை எல்லாம் அவனை உணரச் செய்வது காருண்யமிகு ஸதாசார்யர்கள். ஆச்ரிதர்களாம் நம் மீது இத்தகைய அளவற்ற காருண்யத்தினை கொண்டிருந்த இரு பெரும் ஆசார்ய சிரோன்மணிகள் ஆலிநாடனும் ஆரணதேசிகனும் ஆவர்.

ஈடு இணையில்லாத பகவத் பக்தி, கவிதா ஸாமர்த்யம், ப்ரபத்தி பற்றின நோக்கு, அர்ச்சையில் ஆழ்ந்த ஈடுபாடு, ஒப்பற்ற வாதத் திறமை என்று இந்த இரு ஆசார்ய சிரோன்மணிகளிடையே நிலவும் பொருத்தங்கள் பற்பல. வெள்ளைப் பரிமுகனார் இவர்களை ஆட்கொண்ட விதம், ஆலிநாடனும் ஆரண தேசிகனும் பரிமுகத்தானைக் கொண்டாடும் பாங்கு உள்பட இந்த இருவரிடையே இருந்த ஒற்றுமைகளில் அந்வயித்து அவர்களின் அநுக்ரஹத்தினைப் பெறுவோம்.

**திருநாமங்கள் உண்டான கதை**

தனது மனையாளாம் குமுதவல்லியின் சொல்படி நிரவதிகமாக பகவத் கைங்கர்யம் பண்ண ஆவல் கொண்டார் **திருமங்கை** எனும் நாட்டின்

**மன்னன்.** ஸ்ரீரங்கம் கோயிலுக்கு மதில் சுவற்றினை எழுப்பிய பின்னர் வறியவரான திருமங்கை மன்னன் (எம்பெருமானின் கபட நாடகம்), மேலும் பகவத் கைங்கர்யம் செய்வதற்கென வழிப்பறியில் ஈடுபட, இவரை ஆட்கொள்ள ஸங்கல்பித்து பத்னி ஸஹிதனாய் மாறுவேடம் பூண்டு வருகிறார் அவரது எஜமானன். ஸர்வாபரண பூஷிதனாய் எழுந்தருளியிருப்பது எம்பெருமானும் அவனது நாயகியும் என்றறியாது அவர்களின் திருவாபரணங்களை அபஹரிக்கிறார் திருமங்கை மன்னன்.

சரணாகத வத்ஸலனாம் எம்பெருமானின் திருவடிகளில் இருந்த மெட்டியினைக் கழட்ட முடியாது அந்த பக்தியில் சிறந்த கள்வன் திண்டாட, **'நீ சரியான கலியன்'** என்கிறார் கள்வனைக் களவாடிய அந்தக் கள்வன். கலியன் என்றால் பலமுடையவன் என்று பொருள். இப்படி எம்பெருமானால் **கலியன்** என்று திருநாமம் பெற்ற அந்த முரட்டு பக்தனுக்கு, ஸர்வ வேதாந்த ஸாரமான திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தை உபதேசித்து, தனது திவ்ய ஸ்வரூபத்தை ஸேவிக்கச் செய்து, அவரது அஜ்ஞானத்தினை அகற்றி தத்வஜ்ஞானம் அநுக்ரஹித்தான் தனது அடியார் ஹ்ருதயத்தினைக் கொள்ளை கொள்ளும் அந்தக் கள்வன்.

**திருமங்கை** என்பது கலியனின் நாடாக, ஆசார்யன் தேசிகனுக்கோ அவரது மனையாளின் திருநாமமானது. திருவேங்கடமுடையானின் தீர்த்தவாரித் திருநாளில் அவதரித்த காலத்தே வேங்கடநாதன் என்ற திருநாமத்தினைக் கொண்ட ஆசார்யன், திவ்ய தேச எம்பெருமான்களுக்கு மங்களாசாஸனம் செய்வதற்கென தான் சென்ற இடங்களிலுள்ள சீடர்களுக்கெல்லாம் பஞ்ச ஸம்ஸ்காரமும் மந்த்ரோபதேசமும் செய்வித்ததனால், ஆசார்யன் எனும் பொருள் படும்படியாக **'தேசிகன்'** என்ற திருநாமம் உண்டானது.

**பரிமுகன் ஆட்கொண்ட பாவனர்கள்**

நாலு கவிப்பெருமாள் என்று கொண்டாடப்படும் திருமங்கை ஆழ்வார் ஆடல்மா எனும் பெயர் கொண்ட குதிரையின் மீதேறித்தான் அனைத்து இடங்களுக்கும் வலம் வருவார். மன்னனாய், பின் கள்வனாய் உஜ்ஜீவித்த தனது பக்தனை பரிமுகரூபியாய் (ஆடல்மா) எம்பெருமானே தாங்கிப் பிடித்து நல்ஞானம் அநுக்ரஹித்தார் என்பர் நம் பூர்வர். தசாவராதங்களுள் அடங்காத எம்பெருமானின் பேரவதாரத்தை பாங்குற விளக்கும் இந்த பாசுரம், திருமங்கை மன்னனுக்குப் பரிமுகன் ப்ரத்யக்ஷம் என்பதை நிஷ்கர்ஷம் பண்ணும்.

*முன்னிவ்வுலகேழும் இருள் மண்டியுண்ண*
*முனிவரொடு தானவர்கள் திகைப்ப, வந்து*
*பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம்*
*பரிமுகமாயருளிய எம்பரமன் காண்மின்*
*செந்நெல்மலி கதிர்க்கவரி வீச*
*சங்கம் அவைமுரலச் செங்கமல மலரையேறி*
*அன்னமலி பெடையோடும் அமரும் செல்வத்து*
*தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே.*

(பெரிய திருமொழி 7-8-2)

அனுதினமும் அர்த்தராத்ரியில் திருவேங்கடமுடையானை ப்ரஹ்மன் ஆராதிக்கவென (ஐதிஹ்யம்) பூமியில் அவதரித்தவர் திருமணியாழ்வார். திருவஹீந்த்ரபுரம் ஸ்ரீதேவநாதன் ஸந்நிதி எதிரில் அமைந்துள்ள ஔஷாதாத்ரி என்ற சிறிய மலையின் மீதமர்ந்து கருட மந்த்ரத்தினை ஸ்வாமியானவர் ஜபிக்க, ஸ்ரீகருடன் ப்ரத்யக்ஷமாகி ஸ்ரீஹயக்ரீவ மந்த்ரத்தை அவருக்கு உபதேசித்தார். ப்ரத்யக்ஷமான பரிமுகனோ தனது திருமுகத்திலிருந்த லாலாம்ருதத்தை ஸ்ரீவேங்கடநாதனுக்கு ஊட்டியருள, எல்லையில்லா ஞானத்தினைப் பெற்றார் ஆரண தேசிகன்.

வெள்ளைப் பரிமுக தேசிகனாராம் ஸ்ரீஹயக்ரீவன் ஆலிநாடனையும் ஆரண தேசிகனையும் ஆட்கொண்ட பாங்கினை அவர்களது பாசுரம் மற்றும் திருவரலாறு அழுந்தக் கூறும்.

**பரிமுகனைக் கொண்டாடும் பாவனர்கள்**

*வசையில் நான்மறை கெடுத்தவம் மலரயற்கருளி முன் பரிமுகமாய்*
*இசைகொள் வேதநூலென்றிவை பயந்தவனே எனக்கருள் புரியே*
*உயர்கொள் மாதவிப் போதொடுலாவிய மாருதம் வீதியின்வாய்*
*திசையெல்லாம் கமழும் பொழில்சூழ் திருவெள்ளறை நின்றானே!*

(பெரிய திருமொழி 5-3-2)

முன்னொரு காலத்தே பரிமுகமாய் எழுந்தருளி சதுர் வேதங்களை மீட்டுக் காத்தவனான எம்பெருமான் திருவெள்ளறை ஸந்நிதியில் அர்ச்சாமூர்த்தியாக நிற்கிறான் என்று மங்கைமன்னன் ஸாதிக்கும் பாசுரம் இது.

*வ்ருஷாத்ரி ஹயஸாதிந: ப்ரபலதோர்மருத் ப்ரேங்கித:*
*த்விஷா ஸ்ப்புட தடித்குணஸ் த்வதவஸேக ஸம்ஸ்காரவாந் |*
*கரிஷ்யதி தயே கலி ப்ரபல கர்ம நிர்மூலன:*
*புந: க்ருதயுகாங்குரம் புவி க்ருபாண தாராதர: ||*

(தயா சதகம் - 90)

கலியுகத்தில் இப்புவிதனில் தழைத்ததோங்கும் அதர்மத்தினை வேருடன் அறுத்து, க்ருதயுகம் தொடங்குவதற்கான ஏற்பாடுகளை ஆரம்பித்து வைப்பதற்கென, ஸ்ரீநிவாஸன் எனும் திருநாமம் கொண்டு எம்பெருமான் திருவேங்கட மாமலையின் மேல் நின்று கொண்டிருக்கிறான். அதோ அம்மலையில் அவன் பரியின் (குதிரை) மீது அமர்ந்த திருக்கோலத்தினைக் கொண்டு தனது திருக்கரத்தில் ஏந்தியிருக்கும் வாளினை வீசுகிறான் பாருங்கள் என்கிறார் ஆரண தேசிகன்.

பரகாலனின் பாசுரம் அந்த மஹாபுருஷனே ஆதிமூலம் என்பதைக் காண்பித்தருள, ஆரண தேசிகனோ கல்கி அவதாரம் கொள்ளப் போகும் அந்த ஆதி மூலமானவன் அந்தமில்லாதவன் என்று அழுந்தக் கூறுகிறார்.

ஆதியும் அந்தமும் அற்றவனான கோவிந்தனே நமக்கு இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் (யுகங்கள் கடந்து) பற்றானவன் என்பதை இருபெரும் ஆசார்ய சிரோன்மணிகள் நிஷ்கர்ஷம் பண்ணும் பதங்கள் இவை.

**சரணாகதியும் ஆசார்யன் திருவடியும்**

*சாதலும் பிறத்தம் என்றிவற்றை*
*காதல் செய்யாதுன கழலடைந்தேன்*
*ஓதல்செய் நான்மறையாகி உம்பர்*
*ஆதல்செய் மூவுருவானவனே*
*ஆண்டாய் உனைக் காண்பதோர் அருளெனக்கருளுதியேல்*
*வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே.*

(பெரிய திருமொழி 6-1-9)

''வேண்டேன் மனை வாழ்க்கையை; நின் திருவடி வந்தடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே'' என்று தன்னொப்பார் அற்றவனிடம் சரணடையும் திருமங்கை மன்னன், இம்மையின் அர்த்தமற்ற தன்மையினையும் சரணாகதி என்பதன் ஏற்றத் தினையும் உணர்த்துகிறார்.

*...வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேலேந்தும்*
*மங்கையர்க்கோனென்றிவர்கள் மகிழ்ந்து பாடும்*
*செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியவோதித்*
*தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே.*

(அதிகார ஸங்க்ரஹம் - 1)

ஆரண தேசிகனின் ப்ரபந்தங்களுள் ஒன்றான அதிகார ஸங்க்ரஹம், தொடக்கத்திலேயே மங்கையர்க்கோனாம் திருமங்கை மன்னனைத் தொழுதேத்தும் பதங்கள் இவை. சித், அசித் என்று அனைத்திற்கும் உரியவனின் பராக்ரமத்தினை திருமங்கை மன்னன் பேச, கலியன் உரை குடிகொண்ட கருத்துடையோனாம் நம் ஆசார்யன் தேசிகனோ ஞானம் அருளும் பெரிய திருமொழி, ஐயன் அருட்கலியன், குலா நெடுந் தாண்டகம் என்று பரகாலனைப் பலவாறு போற்றித் தொழுது, ஆழ்வாரின் வைபவத்தினை விளக்குகிறார்.

**அனைத்துமானவனின் அற்புதத் திருநாமம்**

*எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்*
*எனக்கரசு என்னுடை வாணாள்*
*அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி*
*அவருயிர் செகுத்த எம் அண்ணல்*
*வம்புலாம் சோலை மாமதிள்*
*தஞ்சை மாமணிக்கோயில் வணங்கி*
*நம்பிகாய் உள்ள நான் கண்டு கொண்டேன்*
*நாராயணா என்னும் நாமம்*

(பெரிய திருமொழி 1-1-6)

தனக்கு அனைத்துமாவது நாராயணா என்னும் திருநாமம் என்பதைக் கூறும் ஆலிநாடனின் இந்தப் பாசுர வரிகளையொத்து ஆரணதேசிகன் ஸேவிக்கும் வரிகள் இதோ.

*தாயும் நீயே சாயை தந்து உகத்தலின்*
*தந்தையும் நீயே முந்தி நின்று அளித்தலின்*
*உறவும் நீயே துறவாது ஒழிதலின்*
*உற்றதும் நீயே சிற்றின்பம் இன்மையின்*
*ஆறும் நீயே ஆற்றுக்கு அருள்தலின்*
*அறமும் நீயே மற நிலை மாய்த்தலின்*
*துணைவனும் நீயே இணையிலையாதலின்*
*துய்யனும் நீயே செய்யாள் உறைதலின்...*

(மும்மணிக்கோவை - 7)

**திருக்கார்த்திகைத் திருநாள்**

கார்த்திகை மாதம் திருக்கார்த்திகைத் திருநாளில் அவதரித்தவர் திருமங்கை ஆழ்வார். அதே திருநாளில் திருமங்கை மன்னனின் புறப்பாடு முடிந்து தீர்த்தப் ப்ரஸாதம் பெற்று தனது திருமாளிகைக்கு ஆசார்யன் தேசிகன் எழுந்தருளிய பின்பு, அவர்தமது சிஷ்யகோடிகள் **சூழ் விசும்பு அணி முகில் தூரியம் முழக்கின ஆழ் கடல் அலை திரை கை எடுத்து ஆடின எழ பொழிலும் வளம் ஏந்திய என்னப்பன் வாழ் புகழ் நாரணன் தமரைக் கண்டு உகந்தே** (திருவாய்மொழி 10-9-1) என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழியினை அநுஸந்திக்க, ஆரண தேசிகனின் அவதாரம் ஸமாப்தி ஆயிற்று.

**நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும் சோரும் நெடிது உயிர்க்கும், பொருகயல் கண்ணீர் அரும்பப் போந்து நின்று...** என்று திருநெடுந்தாண்டகத்தில் எம்பெருமானை நினைந்து உருகும் திருமங்கைமன்னன் மற்றும் மறு ஜன்மம் அற்றுப் போக எம்பெருமான் திருவடிகளே நமக்குப் புகல் என்று உபதேசிக்கும் ஸ்ரீமத் வேதாந்த தேசிகனின் ஸ்ரீபாதரேணுவாக ஜன்மம் கொண்டுள்ளோம். அகப்படற்கரிய ஸுக்ருதம் இது என்பதனை உணர்ந்து, எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை என்பதைப் பரக்க உரைக்கும் அவர்தமது ஸ்ரீஸூக்திகளை நித்தம் அநுஸந்தித்து, நானிலத்தே நமக்கார் நிகரென ஆசார்ய பரம்பரையினைக் கொண்டாடிக் களிப்போம்!

**Sponsorships and donations towards publication expenses are welcome**

# An Overview of Thooppul Pillai's Tamil Prabandhams (7)

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

The next Prabandham in the series is Gitartha Sangraham, which essentially is a Tamil translation of Sri Aalavandhaar's Sanskrit work with the same title. Both are chapter-wise presentation of the Bhagavath Gita in verses.

The Bhagavath Gita is among the most renowned scriptures in the world. It contains, as we all know, the preaching or advice Sri Krishna gave Arjuna during the Kurukshethra war. Krishna, after patiently explaining about Karma Yoga, Jnana Yoga and Bhakthi Yoga to Arjuna, finds that the confusion in the mind of His disciple only got confounded. So, finally, through what is known as the 'Charama Sloka', Krishna asks Arjuna to ignore all that he was told before and simply surrender unto Him; and that He would relieve Arjuna of all sins and grant him the Moksham, and so Arjuna need not worry.

Sri Ramanuja has come up with a commentary for Aalavandhaar's Gitartha Sangraham, while Swami Desika wrote an expansive commentary by the name 'Thaathparya Chandrika' for Sri Ramanuja's brief one. In addition, Swami Desika has composed 'Gitartha Sangraha Rakshai', another beautiful elaboration of Aalavandhaar's original work.

**15. Gitartha Sangraham**

This Tamil Prabandham of Swami Desika comprises 21 verses, with the 18 chapters of the Gita dealt with in a nutshell from the second to the 19th Paasuram. A verse-wise gist of the Prabandham is presented below:

1. General prelude to the Prabandham, where the author says the Lord — the Consort of Mahalakshmi and the charioteer of Arjuna — preached Gita to the latter.
2. Finding that the affectionate relatives are up against him in the battlefield, Arjuna was unnerved and looked up to Krishna. The Lord smilingly explained to him the truth about souls (Athmas).
3. The wonder Lord consoled Arjuna, saying that the body will get destroyed but not the soul which is permanent like Himself, and that one has to get rid of affection, but should not abandon Karmas.
4. The Lord told Arjuna that the noble elders, who insisted that all the Karmas that have been laid down in the Saasthras have to be dedicated to Him only, are wise men.
5. The Lord, who resides in the Vedas, advised His friend of His greatness of taking Avatharas to relieve people from the birth cycle, the mandatory Karmas shining with the presence of knowledge and the state of those who understand the good nature of Athma.
6. The Lord of Dwaraka told Indra's son the importance of observing Karmas and the resultant maturity, and that through knowledge one can comprehend the nature of the soul.
7. The Lord, who reclines in Yoga Nidhra on the serpent, conveyed to the well-crowned and valourous Arjuna the method of meditation on Jiva, the four rules governing it, the means of Yoga and its benefits, and the importance of meditating Him.
8. The honey-soaked, lotus-feet Lord made Vijaya understand that the worldly bindings come in one's way preventing the realisation of His supreme nature, that there was no means other than Himself to get rid of illusion and the greatness of Jnani among the four kinds of devotees (Aarthan, Arthaarthi, Jijnaasu and Jnaani).



9. Sriman Narayana told the confused Vijaya things the first three kinds of people in the previous verse — those who are after wealth (Aarthans), the ones who are desirous of the experience of Kaivalyam (Arthaarthis) and those who seek the Moksham (Jijnaasus) — need to understand and observe.
10. The Lord of great form explained to Arjuna His own greatness and uniqueness, the Kainkaryams that devout people perform to Him, and the Bhakthi Yoga on Him.
11. The infinite Lord told Indra's son about His inestimable virtues in order to imbibe immeasurable devotion in him.
12. Our Lord stated that He is the body of all things in the Universe and presented His real form to Arjuna. Is there any other means to ensure this, except Bhakthi Yoga? Noble people would confirm this, He added.
13. The Lord, who is kind to His devotees, told Partha that Bhakthi Yoga will fructify without delay unlike the act of meditating one's Athma.
14. The Lord with the honey-soaked, lotus feet clarified to Partha about body, soul, the means of gaining knowledge of soul, and that it was different from body, etc.
15. The Lord without the three qualities (Sathva, Rajas and Thamas) explained King Arjuna how the three virtues are deterrent to salvation and how they could be overcome.
16. The Lord who strode the world asserted to Vijaya that He was different from (and superior to) the 24 Thathvas, the devotees (Bhakthas), those who have attained Moksham (Mukthas), and the Nithyasooris (Nithyas).
17. Krishna told Vijaya the importance of adhering to the Vedas and advised him that he could understand everything through them.
18. The Lord who revealed the Vedas told the son of Indra that the rules that contradict the Vedas are for Asuras, and that only those which conform to the Vedas have to be followed by us. He further mentioned about the triple virtues (Sathva, Rajas, Thamas), the three actions (sacrifice, penance, gift), the three modes of actions (body, speech, mind) and the three Manthras chanted ahead of the Vedas (Om, Thath, Sath).
19. The Lord, who blesses all with good nature, advised the unparalleled Partha his liking for adherence to Karmas as prescribed in the Saasthras with Saathvika Thyagam (sacrificing the ownership for performing them, the satisfaction and the benefit), and explained about salvation and surrender.
20. Those who talk about, listen or support Bhagavath Gita, which is an ocean of delight, would get rid of the sea of distress and thrive.
21. Devout people may intently learn this flawless Prabandham which gives out the meaning of the sweet Bhagavath Gita, and was composed by Vedantha Desika, an authority on the four Vedas.

***(to be continued...)***







ஏகாதசி - வெள்ளிக்கிழமை





## உத்தரம் தாயார் உத்ஸவம்







